# கலைஞர் நூற்றாண்டு நூலகம்: மதுரைக்கு மற்றுமொரு மணிமகுடம்!

**வா**சிப்பிலும் எழுத்திலும் தீராக் காதல் கொண்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞரின் நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடும் விதமாக அவர் பெயரில் மதுரையில் நூலகம் தொடங்கப்படவிருக்கிறது. பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தின் பகுதியாகத் தமிழ்நாட்டின் தலைநகரில் நூலகம் அமைத்தார் கலைஞர். இப்போது, தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தலைநகரில் கலைஞருக்கு நூலகம் அமைத்திருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். தலைவர்களை நினைவுகூரும் கொண்டாட்டங்கள் பொது மக்கள் மீதான அக்கறையுடனும் அவர்கள் பயன்படும் வகையிலும் வெளிப்பட வேண்டும் என்பதற்கு இவை நல்லதோர் எடுத்துக்காட்டுகள்.

உலகளாவிய நூலக சேவையையும், நவீனத் தகவல்களையும் எளிதில் கிடைக்கக் கூடிய வகையில் வழங்கி அறிவுசார் சமூகத்தை வளர்த்தெடுக்க வேண்டும் என்பது இந்நூலகத்தின் முதன்மையான நோக்கம். பிற மாநிலங்களுடனும், உலக நாடுகளுடனும் இணைந்து பண்பாட்டுப் பரிமாற்றம் காண வேண்டும் என்பதற்காக இந்நூலகம் சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், அனைத்துத் தரப்பு மக்களும் பயன்படுத்தும் வகையில் நவீனத் தொழில்நுட்ப வசதியுடன் நூலக சேவை எளிமைப்படுத்தப்பட்டிருக்கிறது. குழந்தைகள் தொடங்கி முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள் என வெவ்வேறு பிரிவினரின் தேவையை உணர்ந்து தொடங்கப்பட்டிருக்கிறது.

### புது நத்தம் சாலையின் புதிய அடையாளம்

கலைஞர் நூற்றாண்டு நூலகம் மதுரை புது நத்தம் சாலையில் அமைந்திருக்கிறது. சென்னை கோட்டூர்புரம் என்றாலே அண்ணா நூலகம் எனும் அளவுக்கு அதன் முகமாக மாறியிருப்பதைப் போல இனி புது நத்தம் என்றால் கலைஞர் நூலகம் என்றாகிவிடும். 2.13 லட்சம் சதுர அடிப் பரப்பளவில், ரூ.114 கோடி மதிப்பீட்டில், அடித்தளம் தரைத்தளத்தோடு 6 தளங்களுடன் பிரமாண்டமாக நூலகம் கட்டப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் பதிப்பிக்கப்படும் அறிவியல் நூல்கள், நவீன வெளியீடுகள், வரலாற்று நூல்கள், மருத்துவ நூல்கள், தொழில்நுட்ப நூல்கள் என வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த 3.3 லட்சம் புத்தகங்கள் இந்நூலகத்துக்காகக் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மதுரையின் மிக முக்கிய அடையாளமாக மாறப்போகும் இந்நூலகத்தை ஜூலை 15 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் திறந்துவைக்கிறார்.

### என்னென்ன பிரிவுகள் உள்ளன?

நூல்களை இரவல் வழங்குவதற்கும் பெற்றுக்கொள்வதற்குமான பிரிவு, சொந்த நூல்கள் வாசிப்பதற்கான பிரிவு, குழந்தைகள் பிரிவு, கலைஞர் பிரிவு, தமிழ் நூல்கள் பிரிவு, நாளிதழ், பருவ இதழ்கள், ஆராய்ச்சி இதழ்கள், ஆங்கில நூல்கள், போட்டித் தேர்வுகள், அரிய நூல்கள், பல்லூடகம், நூல் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவும் அதன் பயன்பாட்டுக்கும் தேவைக்கும் உகந்த விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன. வரலாற்று ஆய்வாளர்களுக்கான மிகப் பெரும் சான்றாதாரக் களஞ்சியமாக இந்த நூலகத்திலுள்ள அரிய நூல்கள் பிரிவு இருக்கும். எடுத்துக்காட்டாக, 1918 இல் வெளிவந்த ‘ஜஸ்டிஸ்’ ஆங்கில இதழ்களும், திராவிட இயக்கத் தலைவர்கள் வெளியிட்ட 50க்கும் மேற்பட்ட இதழ்களும் இந்தப் பிரிவில் இடம்பெற்றுள்ளன. 1824 இல் வெளிவந்த சதுரகராதி முதல் பதிப்பு, லண்டன் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தை அடுத்து மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் மட்டும்தான் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கலைஞர் நூற்றாண்டு நூலகமானது குழந்தைகள், மாணவர்கள், இளைஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், போட்டித் தேர்வுக்குத் தயாராகுபவர்கள், பெண்கள், மூத்த குடிமக்கள் என அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்தும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறை சார்ந்தும் வெளிவந்த தமிழ், ஆங்கில நூல்கள் அந்தந்தத் துறைகளில் சிறந்து விளங்கும் வல்லுநர்களைக் கொண்ட குழுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மேலும், வாசிப்பதற்கும் ஆய்வுக்குமான தளமாக மட்டுமல்லாமல் வேறு பல அறிவுச் செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் நிகழ்ச்சிகளுக்கான அரங்கம், சிறார்களுக்கான திரையரங்கம், சிறார் அறிவியல் கூடம், பார்வைமாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிநூல் ஸ்டுடியோ, கலைக்கூடம் ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன. இதனால், கலை, பண்பாடு, அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த கற்றலுக்கான மையமாகவும் இது இயங்கும். முற்றிலும் குளிரூட்டப்பட்ட இந்நூலகத்தில் மின்னுருவாக்கப் பிரிவுகளும் உண்டு. அரிய நூல்கள், ஆவணங்கள், ஓலைச்சுவடிகள், கையெழுத்துப் பிரதிகளை மின்னுருவாக்கம்செய்து, மின்நூலகம் உருவாக்கி உலகமெங்கும் வாழும் தமிழர்களுக்கு எடுத்துச்செல்லப்படும். பார்வையற்றோருக்கான புத்தகங்கள் மட்டுமில்லாமல் அனைத்துப் புத்தகங்களையும் அவர்கள் வாசிக்கும்படி DAISY MP3, BRF, Audio formatகளில் வழங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுவருகிறது.




### இதர சிறப்பம்சங்கள்

குழந்தைகளுக்கான கதைசொல்லல், அறிவியல் அறிதல், கலைகள், விளையாட்டு, யோகா, கைவினைச் செய்முறைகள் போன்ற தொடர் நிகழ்வுகளையும் விடுமுறை காலச் சிறப்பு நிகழ்ச்சிகளையும் மேற்கொள்ளத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. மகளிருக்கான சுயதொழில் பயிற்சி வகுப்புகள், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு வழிகாட்டி நிகழ்ச்சிகள், மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சிகள், மொழி, இலக்கியம், வரலாறு, பொருளாதாரம், ஊடகம் போன்ற வெவ்வேறு துறைகளைச் சார்ந்த வல்லுநர்களுடன் தொடர் உரையாடல்கள், மாற்றுத் திறனாளிகளுக்கெனத் தனிப்பட்ட சிறப்பு நிகழ்ச்சிகள், நம்முடைய தொன்மையான நாகரிகத்தை அறிந்துகொள்ளும் வகையில் கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், பாறை ஓவியங்கள், அகழாய்வுகள் குறித்து ஆளுமைகளுடன் உரையாடல்கள் என வாசிப்புத் தேடலை அறிவுக் கொண்டாட்டமாக மாற்றும் முயற்சிகளும் இந்நூலகத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இவையெல்லாம் இந்த நூலகத்துடன் சுருங்கிவிடாமல் உலகெங்கும் வாழும் தமிழர்கள் அனைவரும் பயன்பெறத்தக்க வகையில் இணையதளம் வாயிலாகவும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் எடுத்துச்செல்லப்படும். மிக முக்கியமாக, இவையெல்லாம் நூலகத்துக்கான நிரந்தரக் கற்றல் வளங்களாகப் பராமரிக்கப்படும்.

நூலகம் தொடர்ந்து புத்துயிர் பெறும் பொருட்டு, நூலகம் சார்ந்த நவீனத் தொழில்நுட்பங்களைத் தொடர்ந்து தமிழுக்குக் கொண்டுவரவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழில்நுட்பத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப நூலகர்களின் திறன்களை வளர்த்துக்கொள்ளும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும்.

கலைஞரின் வாழ்க்கையைப் பேசும்போது அவருடைய எழுத்துப் பணியும் அதில் முதன்மையான இடம்வகிக்கக்கூடியது. அப்படிப்பட்ட கலைஞரின் நூற்றாண்டு விழாவையொட்டி ஒரு பிரம்மாண்டமான நூலகம் அமைவது என்பது அவருடைய எழுத்துச் செயல்பாட்டுக்கான மிகப் பெரும் மரியாதையாகும். அது அவருக்கு மட்டுல்ல; ஒட்டுமொத்த தமிழ் எழுத்தாளர்களுக்கும் தமிழ் மொழிக்கும் பெருமை தரக்கூடியது!



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (12.07.2023) சைதாப்பேட்டை தொகுதிக்குட்பட்ட அடையாறு மண்டலம், வார்டு169, ஜோதி அம்மாள் நகர் மற்றும் அரசு பண்ணை பகுதியில் ரூ.6.58 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மற்றும் கழிவுநீர் உந்து நிலையத்தினை மக்கள் சேவை பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தனர்..இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குனர் ஆர்.கிர்லோஷ் குமார், தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித், மண்டலக் குழுத் தலைவர்கள் ஆர்.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர், தலைமைப் பொறியாளர், மண்டல அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



‘முத்தமிழறிஞர் கலைஞர்அவர்களின் நூற்றாண்டு ஆட்சிமொழி கருத்தரங்கத்தை நேற்று (12.07.2023) சென்னை, தரமணி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்து, கிரேக்கக் காப்பியங்களான ஹோமரின் இலியத் மற்றும் ஓமரின் ஒடிசி ஆகிய புத்தகங்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ஔவை ந.அருள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர்(பொறுப்பு) கோபிநாத் ஸ்டாலின், நூலாசிரியர் சின்னத்தம்பி ஆகியோர் உள்ளனர்.

## முரசொலி கணினிப் பிரிவு பணியாளர்

# கனகலட்சுமியின் தந்தை - கவிஞர் தமிழ்மறையான் மறைவு!

### தொல்.திருமாவளவன் எம்.பி. - ஜெயகுமார் எம்.பி.- பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் - கழகத்தினர் அஞ்சலி!

*சென்னை,ஜூலை.13-*

*முரசொலி கணினிப் பிரிவு பணியாளர் திருமதி கனகலட்சுமியின் தந்தையும் ‘கடவுள் அம்பேத்கர் அறக்கோயில்’ ‘புத்தர் அறிவுலகம்’ ஆகியவற்றின் நிர்வாகியுமான ராமச்சந்திரன் (எ) கவிஞர் தமிழ்மறையான் (வயது 88) நேற்று அதிகாலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*



*தமிழ்மறையான் வயது மூப்பின் காரணமாக உடல் நலம் குன்றியிருந்த நிலையில் நேற்று (12.7.2023) அதிகாலையில் எண்.6, 3-வது அவென்யூ, அசோக் நகரிலுள்ள தமது இல்லத்தில் இயற்கையெய்தினார்.*

*இச்செய்தியறிந்ததும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜெயகுமார் எம்.பி., பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செ.கு. தமிழரசன், முரசொலி ஆசிரியர் குழுவினர், அலுவலகப் பணியாளர்கள், வட்டக் கழகச் செயலாளர் எம்.எஸ். பழனி, யாழினி எம்.சி., அம்பேத்கர் முன்னாள் எம்.சி., உள்ளிட்ட பல்வேறு கட்சியினர் மறைந்த கவிஞர் தமிழ்மறையானுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.*

*மறைந்த தமிழ்மறையானுக்கு அன்னாராணிகுமார், கலையரசி தமிழ்ச்செல்வன், புகழரசி அறிவழகன், கனகலட்சுமி வீரபாண்டி என்ற 4 மகள்களும் தமிழரசன் என்கிற மகனும், பாண்டிச்செல்வி என்ற மருமகளும் மங்கள கவுரி என்ற மைத்துனியும் சஞ்சீவ பாண்டி, நிவேதா, தினேஷ், பூஜா, மதிஒளி உள்ளிட்ட பேரன், பேத்திகள் உள்ளனர்.*

*தமிழ்மறையானின் மனைவி அஞ்சாலட்சுமி கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இயற்கையெய்தினார்.*

*அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று மாலையில் அசோக் நகரிலுள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு கண்ணம்மாபேட்டை இடுகாட்டை அடைந்தது. அங்கு அவரது உடல் தகனம் செய்யப்பட்டது.*



தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் அடையாறு மற்றும் சைதாப்பேட்டை இ.எஸ்.ஐ (ESI) மருந்தகங்களை ஆய்வு செய்தார். ஆய்வின் போது வெளி நோயாளிகளுக்கு முறையான சிகிச்சை அளிக்கப்படுகிறதா என்பது குறித்தும் போதுமான உயிர் காக்கும் மருந்துகள் இருப்பில் உள்ளதா என்பது குறித்தும் கேட்டறிந்தார். மருந்தகங்களின் சுற்றுச் சூழலை சுகாதாரத்துடன் நன்கு பராமரிக்கப்படவேண்டும் எனவும், நோயாளிகளிடம் அன்புடனும், பரிவுடனும் நடந்து கொள்ள வேண்டும் எனவும் மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார்.

# 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு யமுனை ஆற்றில் வெள்ளப்பெருக்கு!

*டெல்லி , ஜூலை.13-*

*கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு யமுனை ஆற்றின் நீர்மட்டம் 207.55 மீட்டரை எட்டியுள்ளது.*

*கங்கை ஆற்றின் இரண்டாவது மிகப் பெரிய கிளை நதியான யமுனை ஆறு அதன் அதிகபட்ச கொள்ளளவை எட்டியுள்ளது. இன்று பிற்பகல் 1 மணிக்கு யமுனை ஆற்றின் நீர்மட்டம் 207.55 மீட்டரை எட்டியது.*

*முன்னதாக கடந்த 1978 ஆம் ஆண்டு அதிகபட்சமாக 207.49 மீட்டரை எட்டியது. இதையடுத்து 45 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது அதிகபட்ச கொள்ளளவை எட்டியுள்ளது.*

*வடமாநிலங்களில் பெய்து வரும் தொடர் கனமழையின் காரணமாக யமுனை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.*

*குறிப்பாக தில்லியில் வெள்ளப்பெருக்கு ஏற்படலாம் என்பதால் முதல்வர் அரவிந்த் கேஜரிவால், அமைச்சர்கள் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளுடன் அவசர ஆலோசனை நடத்தி வருகிறார்.*

*தில்லி பழைய ரயில்வே பாலம் மூடப்பட்டுள்ளது. ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர்.*

*மேலும் டெல்லி அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.*


தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டடம் ( க & ப ) வட்டம் திருவாரூர்-1.
ஒப்பந்த வகை : ஒட்டு மொத்தம் / இனவிலைமுறை

குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 2 /க (க & ப) வட்டம் / திருவாரூர் / 2023-24 / நாள்: 10.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் சிறப்பு தலைமைப் பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டடம் (க & ப ) வட்டம், திருவாரூர்-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து ஒரு பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1) நாகப்பட்டினம் மாவட்டத்தில் - 1 பணிக்கான விபரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதர விபரங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.

| | | |
|---|---|---|
| 2 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் | 17.07.2023 முதல் 24.07.2023 மாலை 5.00 மணி வரை. |
| 3 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | 24.07.2023 மாலை 5.00 மணி வரை. |
| 4 | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 25.07.2023 பிற்பகல் 3.00 மணி முதல். |

செ.ம.தொ.இ / 3579 / ஒப்பந்தப்புள்ளி /2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"
சிறப்பு தலைமைப் பொறியாளர், பொபது
கட்டட (க & ப) வட்டம், திருவாரூர் - 1.



தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டடம் (க & ப ) வட்டம் தஞ்சாவூர். இனவிலை முறை

குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 01 க.பொ / க (க & ப) வட்டம். தஞ்சாவூர் / 2023-2024 / நாள் : 11.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடம் (க & ப ) வட்டம், தஞ்சாவூர்-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து 26 பணிகளுக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1) தஞ்சாவூர் மாவட்டத்தில் 6 பணிகள், புதுக்கோட்டை மாவட்டத்தில் 10 பணிகள் மற்றும் கடலூர் மாவட்டத்தில் 10 பணிகளுக்கான விபரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.

| | | |
|---|---|---|
| 2 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் | 13.07.2023 முதல் 19.07.2023 மாலை 3.00 மணி வரை. |
| 3 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | 19.07.2023 மாலை 3.00 மணி வரை. |
| 4 | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 20.07.2023 மாலை 3.00 மணி முதல். |

5) விலைமாறுதல்கூறு (Price Adjustment Clause) தோராய மதிப்பு ரூ.1.00 கோடிக்கு மேல்உள்ள பணிகளுக்கு மட்டும் பொருந்தும்

செ.ம.தொ.இ / 3581 / ஒப்பந்தப்புள்ளி /2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"
சிறப்பு தலைமைப் பொறியாளர், பொபது
கட்டட (க & ப) வட்டம், தஞ்சாவூர்- 1.



தமிழ்நாடு அரசு
மதுரை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஓ.அ.எண். 07 / 2023 - 24 / தவஅ / நாள்: 11.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, மதுரை வட்டம் அவர்களால், சி.ஆர்.ஐ.டி.பி 2023-24 தலைப்பின் கீழ் மதுரை கோட்டம் சார்ந்த பணி "மதுரை - தொண்டி சாலை (SH33) கி.மீ 1/2 ல் சாலை மேம்பாலம் அமைத்தல் (Grade Separator) பணி மற்றும் கி.மீ 0/0 & 0/4 ல் சாலை சந்திப்பு மேம்பாலம் அமைத்தல் பணி உட்பட" இணைய வழியில் மட்டுமே இனம் வாரியாக ஒப்பந்தப்புள்ளி 21.08.2023, 15.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 21.07.2023 முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ / 3582/ ஒப்பந்தப்புள்ளி / 2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"
கண்காணிப்புப் பொறியாளர் (நெ),
க(ம)ப, மதுரை வட்டம்.



தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டடம் ( க & ப ) வட்டம் திருவாரூர்-1.
ஒப்பந்த வகை : ஒட்டு மொத்தம் / இனவிலைமுறை

குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 1 /க (க & ப) வட்டம் / திருவாரூர் / 2023-24 / நாள்: 10.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் சிறப்பு தலைமைப் பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டடம் (க & ப ) வட்டம், திருவாரூர்-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து ஏழு பணிகளுக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1) திருவாரூர் மாவட்டத்தில் -1 பணி, நாகப்பட்டினம் மாவட்டத்தில் - 5 பணிகள் மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்தில் -1 பணிகளுக்கான விபரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதர விபரங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.

| | | |
|---|---|---|
| 2 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் | 17.07.2023 முதல் 24.07.2023 மாலை 5.00 மணி வரை. |
| 3 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | 24.07.2023 மாலை 5.00 மணி வரை. |
| 4 | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 25.07.2023 பிற்பகல் 3.00 மணி முதல். |

செ.ம.தொ.இ / 3580 / ஒப்பந்தப்புள்ளி /2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"
சிறப்பு தலைமைப் பொறியாளர், பொபது
கட்டட (க & ப) வட்டம், திருவாரூர் - 1.



தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருவண்ணாமலை
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.05/2023–2024/தவஅ/நாள்–06.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருவண்ணாமலை வட்டம் அவர்களால், சி.ஆர்.ஐ.டி.பி 2021–22 (துணை பணி) திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி (நெ), க(ம)ப கோட்டத்தை சார்ந்த 2 பணிகளுக்கு இரு உறை முறையில் இணையவழி மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 02.08.2023 அன்று 12.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 15.07.2023 முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/3596/ஒப்பந்தப்புள்ளி/2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"
கண்காணிப்புப் பொறியாளர் (நெ)
க(ம)ப வட்டம், திருவண்ணாமலை